[28th March 1969

கழகத்தமிழ் வித்வான் பட்டம்பெற்ற பலர் பல வருடம் வேலை அனுபவம் இருந்தும் வேலை பார்க்க தகுதியற்றவர் என்று கல்வி இலாகாவால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஆம். கேரளா பல்கலைக்கழக வித்வான் பட்டம் சென்னை பல்கலைக்கழக வித்வான் பட்டத்திற்கு நிகரானதல்ல என்று சென்னைப் பல்கலைக்கழகம் கருதுகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, கல்விச் சட்டம் 13வது விதியில் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அல்லது இதர பல்கலைக் கழகத்தினுடைய பட்டம் இந்த மொழி ஆசிரியராகப் பணி புரிவதற்கு தகுதியுடையது என்று விதித்திருக்கும்போது, பல்கலைக் கழக மானியக் குழுவின் பட்டியலில் வரிசை எண் 26 ஆகக் கேரளா பல்கலைக் கழகம் ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கும்போது அவ்வாறு ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டத்தை மாத்திரம் ஒப்புக்கொள்வதற்கில்லை என்று சொல்வது எப்படி முறையாகும்? அந்தச் சட்டம் திருத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஒரு பல்கலைக் கழகம் என்று சொல்வது சரியல்ல. தமிழ்நாட்டை உத்தேசித்து அந்த விதி போடப்பட்டது. கேரள பகுதி சேர்ந்திருந்தபோது அப்படியிருந்தது. பிரிந்தபிறகு அதனால் பாதிக்கப்படுவார்கள் என்று கருதி விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அங்கத்தினர் சுட்டிக்காட்டியபடி, ஏராளமான பிரச்னைகள் வருகின்றன. அதனால் ஏற்கனவே உள்ள விதிகள் மாற்றப்பட்டு கேரள பல்கலைக் கழகம் கொடுக்கும் பட்டம் செல்லாது என்று நம்முடைய விதிகள் திருத்தப்படுகின்றன.

Diplomas of Various State Boards

* 283 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the diplomas awarded by the State Board of Technical Education and Training, Andhra Pradesh, are recognised by the Government of Tamil Nadu as equivalent to the diplomas awarded by the Board of Technical Education and Training, Madras;

(*b*) whether such recognition has been given by the Government of Tamil Nadu to the diplomas awarded by the State Board of Technical Education and Training, Orissa, Punjab, Assam and Mysore; and

(*c*) whether the Government of India have recognised the diplomas awarded by the Board of Technical Education and Training Andhra Pradesh, as equivalent to those awarded by the Madras State Board of Technical Education and Training?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) பல்வேறு மாநில வாரியங்கள் வழங்குகின்ற தகுதி பட்டங்களை (Diplomas) இந்திய அரசு மதிப்பீடு வாரியத்தின் பரிவுரைக்கிணங்க மத்திய அரசுப் பணிகளுக்கு ஏற்றுக்கொள்கிறது. ஒரு மாநில வாரியம் கொடுக்கிற தகுதிப்பட்டத்தை, இன்னொரு மாநில வாரியம் கொடுக்கிற தகுதிப்பட்டத்துக்கு இணையானதாக்கி இந்திய அரசு பொதுவாக ஆணை பிறப்பிப்பதில்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, since the degree awarded by the Department of Technical Education, Andhra Pradesh, is almost equal to that issued by the Department of Technical Education, Tamil Nadu, may I know the objection of the Tamil Nadu Government to recognise the same ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: ஒவ்வொரு மாநிலத்திற்குப் பொருந்தும் இந்தப் பட்டங்களை நாம் அங்கீகரிக்க வேண்டுமென்ற அடிப் படையில் அங்க்கரிக்கிறோம். ஆந்திர மாநிலம் நம்மை விட்டுப் பிரிந்த தற்குப் பிறகு அதைப் பற்றி இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டு பரிசீலித்துக் கொண்டிருக்கும்போது, இடையில் மத்திய அரசு நாடு முழுவதற்கும் ஒரு அங்கீகாரம் வைக்கிற முறை வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். அப்படி ஏற்பட்டுவிட்டால், இந்த **reciprocal basis** வேண்டா மென்று ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையினைப் பின்பற்றலாமா என்று பரிசீலனை செய்யும்போது, காலதாமதம் ஏற்பட் டிருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டால், ஆந்திர மாநிலப் பட்டம் ஏற்றுக்கொள்ளப்படும் சூழ்நிலை உண்டாகும்.

Loans to Elementary School Teachers

* 284 *Q.*—THIRU V. ISVARMURTHI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government propose to extend the facility of interest-free loans to Elementary School teachers?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: அரசாங்கத் தொடக்கப்பள்ளி களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பண்டிகைக் கடன்களும், கொசுவலை கடன்களும் வழங்கப்படுகின்றன. இக்கடன்களுக்கு வட்டியில்லை. வேறெந்த வட்டியில்லாக் கடன்களும் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அரசு மானியம் பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களுக்கு இந்த வசதிகள் எதும் கிடைப்பதில்லை. ஆயினும் ஊராட்சி ஒன்றியங்கள் தமது ஆளுகையின் கீழ் உள்ள தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு, அவற்றின் நிதிநிலை இடந்தருமாயின், அத்தகைய பண்டிகைக் கடன்கள் வழங்கலாம். அதைப்போலவே, தனியார் பள்ளிகளின் நிர்வாகத்தினரும் தாம் விரும்பினால் ஆசிரியர்களுக்கு அத்தகைய கடன்களை வழங்கலாம்.

THIRU K. S. ABDUL WAHAB : May I know the maximum amount that is proposed to be given as loan to the teachers?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன். இப்போது எவ்வளவு கொடுக்கிறார் கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

Seats reserved in Teachers' Training Schools for Scheduled Tribe students

* 285 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of seats reserved in the Teachers' Training School in Tamil Nadu during the academic year 1968–69 for the students belonging to Scheduled Tribes; and

(*b*) the number of students belonging to Scheduled Tribes undergoing teacher training during the current academic year?

மாண்புமிகு திரு. ஸ்ஸ். மாதவன் : (அ) இப்போதுள்ள ஆணைகளின் படி, இம்மாநிலத்திலுள்ள எல்லாப் பயிற்சிப்பள்ளிகளிலும் அரிசனங் களுக்கும், பழங்குடி மக்களுக்கும் 16 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும். இதைத் தவிர பழங்குடி மக்களைச் சேர்ந்தவர்களுக்கென தனிப்பட்ட முறையில் இடம் எதுவும் ஒதுக்கிவைக்கப்படுவதில்லை.

(இ) 26.